ADVERTISE WITH US
CONTACT US
9438610756

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY

சென்னை மலர்: 01 இதழ்: 117 09.12.2025 செவ்வாய்க்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 117 | Tuesday | pages 8 | Rs.5/-

LOCAL NEWS ,EVENTS & ADS - JOB, PROPERTY, HOUSEHOLD, EDUCATION - CHENNAI

### இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(9–12–2025)
விசுவாவசு ஆண்டு,
கார்த்திகை–23
பிறை: தேய்பிறை
திதி
பஞ்சமி இரவு 8.41 வரை
பிறகு சஷ்டி
நட்சத்திரம்:
பூசம் காலை 8.55 வரை
பிறகுஆயில்யம்.
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
பிற்பகல் 3.00 4.30 மணி
எமகண்டம்
காலை 9.00–10.30 மணி.
சூலம் –வடக்கு
நல்ல நேரம் :
காலை 8–9 மணி.
மாலை 5–6 மணி

| | |
|---|---|
| மேஷம் | லாபம் |
| ரிஷபம் | ஆதரவு |
| மிதுனம் | முயற்சி |
| கடகம் | தாமதம் |
| சிம்மம் | பயணம் |
| கன்னி | மாற்றம் |
| துலாம் | பொறுமை |
| விருச்சிகம் | பரிசு |
| தனுசு | பாசம் |
| மகரம் | நன்மை |
| கும்பம் | வெற்றி |
| மீனம் | கடமை |

# வந்தே மாதரம் பாடலால் தான் இந்தியாவுக்கு விடுதலை கிடைத்தது

## பிரதமர் மோடி

**புதுடில்லி,டிச,9:**

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடா கடந்த 1 ஆம் தேதி தொடங்கியது. வருகிற 19-ந் தேதி வரை இந்த கூட்டம் நடைபெறுகிறது.

நாட்டின் தேசியப் பாடலான வந்தே மாதரம் பாடலின் 150-வது ஆண்டு இன்று கொண்டாடப்படுவதால் அதன் வரலாறு குறித்த விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெறுகிறது.

வந்தே மாதரம் பாடலின் 150-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி பாராளுமன்றத்தின் சிறப்பு விவாதம் நடைபெற்றது. மாநிலங்களவையில் வந்தே மாதரம் பாடல் சிறப்பு விவாதத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தொடங்கி வைத்தார்.


மக்களவையில் விவாதத்தை தொடங்கி வைத்து பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

* புனித பாடல் குறித்த விவாதத்தை தொடங்கி வைப்பதில் பெருமை அடைகிறேன்.

* இந்திய நாட்டின் விடுதலைக்கு முக்கியப் பங்காற்றிய பாடல் வந்தே மாதரம்.

* வந்தே மாதரம் என்பதற்குதாய் மண்ணே தலை வணங்குகிறேன் என்பது பொருள்.

*தலைமுறைகளைக் கடந்து உத்வேகம் அளித்து வருகிறது வந்தே மாதரம் பாடல்.



* வந்தே மாதரம் பாடலில் நூற்றாண்டு விழா, நெருக்கடி நிலையின்போது தற்செயலாக அமைந்து விட்டது.

* வந்தே மாதரம் பாடலால் தான் இந்தியாவுக்கு விடுதலை கிடைத்தது.

* இந்த விவாதத்தின் மூலம், எதிர்கால சந்ததியினர் வந்தே மாதரம் குறித்து கற்பிக்கப்படுவர்.

* இந்தியாவின் போர் முழக்க பாடலாக வந்தே மாதரம் இருக்க வேண்டும்.

* God Save the Queen பாடலை இந்தியர்கள் பாட வேண்டும் என பிரிட்டிஷார் விரும்பினர்.

* பிரிட்டிஷாருக்கு பதிலடி கொடுக்கும் வகையில் வந்தே மாதரம் பாடல் அமைந்தது.

* இந்தியர்களின் உறுதியை பறைசாற்றும் பாடலாக வந்தே மாதரம் விளங்குகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# வெற்றியை உறுதி செய்யும் வகையில் பணியாற்ற வேண்டும்

## மாவட்டச் செயலாளர்களுக்கு மு.க.ஸ்டாலின் அறிவுரை

**சென்னை,டிச,9:**

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறும் என தெரிகிறது. இந்த தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி பெற இலக்கு நிர்ணயித்து தி.மு.க. தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வியூகம் வகுத்து செயல்பட்டு வருகிறார்.

இதற்காக வாக்குச்சாவடி வாரியாக பாக முகவர்கள் தி.மு.க.வில் நியமிக்கப்பட்டு உள்ளனர். இவர்கள் அனைவரையும் அந்தந்த நகர ஒன்றிய பேரூர் அளவில் ஒருங்கிணைந்து ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. சட்டமன்ற தொகுதி வாரியாகவும் பாக முகவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் மண்டல அளவில் ஆலோசனை கூட்டங்களை நடத்தி முடித்துள்ளனர். இதன் பிறகு என் வாக்குச் சாவடி-வெற்றி வாக்குச்சாவடி பயிற்சி கூட்டத்தை மாமல்ல புரத்தில் கடந்த அக்டோபர் மாதம் 28-ந் தேதி நடத்தினார்.

ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வெற்றியை உறுதி செய்யும் வகையில் பணியாற்ற வேண்டும் என்று கட்டளையிட்டு இருந்தார். இப்போது என் வாக்குச் சாவடி-வெற்றி வாக்குச் சாவடி செயல்பாடு எப்படி உள்ளது என்பது பற்றி ஆலோசிக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காணொலி வாயிலாக மாவட்டக் கழக யெலாளர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

அவரது அறிவுரைகளை கேட்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாநகர ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற, உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர் கள் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோரை ஒரே இடத்தில் அமர வைத்து முதலமைச்சரின் பேச்சை கேட்பதற்காக மாவட்டச் செயலாளர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.



அதன்படி காலை 10 மணிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலியில் உரையாற்றினார். அவர்பேசும்போது,தமிழ்நாட்டை கபளீகரம் செய்ய திட்டமிடும் கூட்டத்தை வேரோடு வீழ்த்துவோம். ஒன்றிய பி.ஜே.பி. அரசு தமிழ்நாட்டுக்கு செய்து கொண்டிருக்கும் துரோகங்களை நிதி ஒதுக்கீடுகளில் செய்து கொண்டிருக்கும் வஞ்சகங்களை எடுத்துச் சொல்லுங்கள். நீங்கள் அனைவரும் ஒருங்கிணைந்து அவரவர் வாக்குச்சாவடியில் வெற்றி பெறுவது இலக்காக இருக்க வேண்டும். ஒவ்வொரு பூத்துக்கும் ஒரு டார்கெட் உருவாக்கி செயல்படுங்கள்.

தேர்தலில் பணியாற்றும் ஒவ்வொருவரும் தி.மு.கழகம் ஆட்சி அமைக்க வேண்டும் என்ற இலக்கை உள்ளத்தில் தாங்கி உழைக்க வேண்டும். நீங்கள் உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். எனக்கு நன்றாக தெரியும். ஆனாலும் இன்னும் உங்கள் பணியை வேகப்படுத்துங்கள்.

அனைவரும் ஒற்றுமையாக பணியாற்றுங்கள். ஒற்றுமை இல்லாமல் எந்த இலக்கையும் அடைய முடியாது. நம்முடைய வெற்றியை யாரும் தடுக்க முடியாது.

என்னுடைய வாக்குச்சாவடியில் தி.மு.க. கூட்டணியை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று ஒவ்வொரு கழக உடன் பிறப்புகளும் உறுதியேற்று களப்பணியாற்றினால், அனைத்து வாக்குச்சாவடிகளிலும் முன்னிலை பெற்று, 2026-ல் 7-வது முறையாக தி.மு.கழகம் ஆட்சி அமைவது உறுதியாகி விடும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் மகா கும்பாபிஷேக விழா

## வெகு விமர்சையாக நடைபெற்றது





**காஞ்சிபுரம்,டிச,9:**

வரலாற்றுப் பெருமையும்,புராணச் சிறப்பும் உடையது காஞ்சிபுரத்தில் உள்ள ஏலவார்குழலி சமேத ஏகாம்பரநாதர் கோயில். பஞ்சபூத ஸ்தலங்களில் நிலத்துக்குரியதாகவும் போற்றப்படும் இக்கோயிலுக்கு மகா கும்பாபிஷேகம் செய்வதற்கான திருப்பணிகள் ரூ.29 கோடி மதிப்பில் நடைபெற்று முடிந்துள்ளது. கடந்த 28.6.2023 ஆம் தேதி பாலாலயம் நடத்தப்பட்டது.

இந்த நிலையில் டிச.8 திங்கள்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெறும் என அறநிலையத் துறை அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து ஆலய வளாகத்தில் உள்ள சிவகங்கை தீர்த்தக்குளம் அருகே 170 சிவாச்சாரியார்கள்,170 வேத விற்பன்னர்கள் ஒரே நேரத்தில் அமர்ந்து யாகசாலை பூஜைகளை செய்யும் வகையில் பிரம்மாண்டமான நவகுண்ட யாகசாலை மண்டபம் அமைக்கப்பட்டது.

யாகசாலை பூஜைகள் இம்மாதம் 4 ஆம் தேதி அனுக்கை விக்னேசுவர பூஜையுடன் தொடங்கியது. இதன் தொடர்ச்சியாக டிச.5,6,7 ஆகிய தேதிகளில் விசேஷ சந்தி யாகபூஜைகளும் நடைபெற்றன. யாகசாலை பூஜைகளை கோயில் ஸ்தானீகர்கள், ஸ்தலத்தார்கள் நடத்தினார்கள். 30க்கும் மேற்பட்ட ஓதுவா மூர்த்திகள் பக்க இசைக்கலைஞர்களுடன் திருமுறைப்பாராயணமும் பாடினார்கள்.

திங்கள்கிழமை அதிகாலை 5 மணிக்கு யாகசாலையிலிருந்து புனித நீர்க்குடங்கள் கோபுரங்களுக்கு ஏராளமான சிவ வாத்தியங்கள், மங்கல மேள வாத்தியங்கள் இசைக்க எடுத்துச் செல்லப்பட்டு காலை 6.10 மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தின் போது மூலவர் கோபுரத்தின் மீது காஞ்சி சங்கராச்சாரியார் விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் இளைய பீடாதிபதி சத்திய சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆகியோர் முன்னிலையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து மூலவருக்கும், பரிவார தெய்வங்களுக்கும் சிறப்பு அபிஷேகமும், அலங்கார தீபாராதனைகளும் நடைபெற்றன.


ஏற்பாடுகளை கோயில் அறங்காவலர் குழுவின் தலைவர் எம்.வி.எம்.வேல்மோகன் தலைமையில் அறங்காவலர் குழு உறுப்பினர்கள், இணை ஆணையர் சி.குமரதுரை, கோயில் செயல் அலுவலர் ப.முத்துலட்சுமி ஆகியோர் தலைமையில் விழாக் குழுவினரும் கோயில் பணியாளர்களும் செய்திருந்தனர். ஆன்மீக சொற்பொழிவாளர் தேச மங்கையர்க்கரசி கும்பாபிஷேகத்தை நேர்முக வர்ணனை செய்தார்.

விழாவில் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் சிதம்பரநாத சுவாமிகள், தர்மபுரம் ஆதீனம் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி வேல்முருகன், காஞ்சிபுரம் மாவட்ட முதன்மை நீதிபதி தீப்தி அறிவுமதி, திருப்பணிச் செம்மல் மகாலட்சுமி சுப்பிரமணியம், காஞ்சிபுரம் மாவட்ட தலைமை குற்றவியல் நீதிமன்ற நீதிபதி மோகனாம்பாள், தொழிலாளர் நீதிமன்ற நீதிபதி சுஜாதா , காஞ்சிபுரம் சட்டப்பேரவை உறுப்பினர் எழிலரசன், ஸ்டேட் வங்கி முதன்மை மேலாளர்கள் மணிகண்டன், பாலமுருகன் உள்பட பலரும் கலந்து கொண்டனர், காஞ்சிபுரம் எஸ்பி கே. சண்முகம் தலைமையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். கும்பாபிஷேகத்தை ஒட்டி ஆலயம் முழுவதும் வண்ண மின்விளக்குகளாலும் வண்ண மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

காஞ்சிபுரம் நகரில் பல்வேறு இடங்களில் வணிக நிறுவனங்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் சார்பில் அன்னதானமும் நடைபெற்றது.

# நடிகை பாலியல் வழக்கு: கேரள நடிகர் திலீப் விடுதலை

**எர்ணாகுளம்,டிச,9:**



கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டம் அங்கமாலி அருகே அத்தாணி பகுதியில், கடந்த 17.2.2017 அன்று பிரபல நடிகை ஒருவர் படப்பிடிப்பு முடிந்து கேரவனில் சென்று கொண்டிருந்தார். அப்போது பின்னால் காரில் வந்த கும்பல் கேரவனை தடுத்து நிறுத்தி, அதன் உள்ளே அத்துமீறி நுழைந்தது. அங்கு இருந்த நடிகைக்கு பாலியல் துன்புறுத்தல் கொடுத்தது.

இதுகுறித்து நடிகை அளித்த புகாரின் பேரில் மாநில குற்றப்புலன் விசாரணை பிரிவு போலீசார் விசாரித்து வந்தனர். விசாரணையில் பெரும்பாவூர் அருகே கூவப்படியை சேர்ந்த பல்சர் சுனில் என்கிற சுனில் குமார் என்பவர் உள்பட சிலர் அந்த செயலில் ஈடுபட்டதும், அவர் நடிகையின் கார் டிரைவராக இருந்ததும் தெரியவந்தது. அவரை போலீசார் கைது செய்தனர்.

இந்த வழக்கில் மலையாள பிரபல நடிகர் திலீப்புக்கும், நடிகைக்கும் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக, திலீப் சதி திட்டம் தீட்டி நடிகைக்கு பாலியல் துன்புறுத்தல் கொடுத்ததாக கூறப்பட்டது. அதை தொடர்ந்து நடிகர் திலீப், பல்சர் சுனில் உள்பட 8 பேரை போலீசார் கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை எர்ணாகுளம் முதன்மை செசன்ஸ் கோர்ட்டில் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கில் எனக்கு எந்த தொடர்பும் இல்லை. திட்டமிட்டு என்னை சிக்க வைத்து உள்ளதாக நடிகர் திலீப் தெரிவித்துள்ளார். இந்த வழக்கில் 251 சாட்சிகளிடம் விசாரணை நடத்தப்பட்டு வந்தது.

இந்த வழக்கில் இன்று தீர்ப்பளித்த எர்ணாகுளம் நீதிமன்றம் நடிகர் திலீப் மீதான குற்றச்சாட்டிற்கு போதிய ஆதாரம் இல்லை என்று கூறி விடுதலை செய்துள்ளது. மேலும் அவரது நண்பர் சரத் என்பவரை பாலியல் துன்புறுத்தல் வழக்கில் விடுவித்துள்ளது. மார்ட்டின் ஆண்டனி, மணிகண்டன், சுனில் உள்ளிட்ட 6 பேர் குற்றவாளிகள் என்றும் எர்ணாகுளம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# கோவையில் இன்று 8 விமானங்கள் ரத்து

**கோவை, டிச.09:**

நாடு முழுவதும் விமானிகள் மற்றும் பணிப்பெண்கள் உள்ளடக்கிய கேபின் க்ரு ஓய்வு நேரத்தை 36-ல் இருந்து 48 மணி நேரமாக அதிகரித்து சிவில் விமான போக்குவரத்து இயக்குனரகம் அறிவிப்பு வெளியிட்டது. இதனால் உள்நாட்டில் விமான போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

கோவை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு நகரங்களில் இருந்து இயக்கப்படும் விமானங்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்தது. இதனால் பயணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகம் உத்தரவை திரும்ப பெற்ற நிலையிலும் விமானங்கள் சேவை ரத்து செய்யப்படுவது தொடர்ந்தது. நேற்று கோவையில் 10 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இன்று 7-வது நாளாக கோவையில் இருந்து செல்லும் 8 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

கோவையில் இருந்து சென்னைக்கு செல்லும் 2 விமானம் உள்பட 8 விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால் பயணிகள் மாற்று பயணம் மூலம் தாங்கள் செல்ல வேண்டிய இங்களுக்கு சென்றனர்.

இதற்கிடையே இன்று காலை கோவை விமான நிலையத்திற்கு அபுதாபியில் இருந்து வந்த விமான பயணிகள் வெளியில் செல்லும் வழியாக சென்று கொண்டிருந்தனர். அப்போது பயணி ஒருவரின் சூட்கேட்ஸ் அறை கண்ணாடி கதவில் பட்டு கண்ணாடி கதவு உடைந்தது.

இதுகுறித்து மத்திய தொழில்பாதுகாப்பு படை மற்றும் விமான நிலைய அதிகாரிகள் விசாரணை நடத்தினர். அப்போது அந்த பயணி அவசரமாக வெளியில் செல்ல முயன்ற போது எதிர்பாராத விதமாக சூட்கேஸ் பட்டதால் கண்ணாடி கதவு உடைத்தது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து அவருக்கு ரூ.500 அபராதம் விதித்து அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

# அமலாக்கத்துறை மீண்டும் நோட்டீஸ்: அதெல்லாம் ஒன்றும் இல்ல... நான் பார்த்துக் கொள்கிறேன் - அமைச்சர் கே.என்.நேரு,

**திருச்சி, டிச.09:**

என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில், திருச்சி மாவட்ட தி.மு.க. செயலாளர்கள் கூட்டம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது.

அதில் காணொளி மூலமாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார். அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு மாவட்ட செயலாளர்களிடம் பேசினார்.

இதனை தொடர்ந்து அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது,



அமலாக்கத்துறை இரண்டாம் முறையாக தமிழக தலைமைச் செயலாளர் மற்றும் டி.ஜி.பி. க்கு நோட்டீஸ் அனுப்பி உள்ளது தொடர்பாக நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அதெல்லாம் ஒன்றும் இல்லை. நான் பார்த்துக் கொள்கிறேன் என்று பதில் அளித்து அங்கிருந்து அமைச்சர் புறப்பட்டு சென்றார்.

# திருக்கார்த்திகை தீபத் திருவிழா நிறைவு



**திருவண்ணாமலை, டிச.09:**

திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் தீபத் திருவிழா இனிதே முடிவடைந்ததையொட்டி சண்டிகேஸ்வரர் ரிஷப வாகனத்தில் மாடவீதி உலா நடைபெற்றது. இலட்சக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# த.வெ.க. தலைமையில் பெரும் கூட்டணி அமைந்தால் தி.மு.க.விற்கு போட்டியாக அமையும்

## டி.டி.வி. தினகரன்




**திருப்பூர்,**

அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் திருப்பூர் மாநகர மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாநகர மாவட்ட செயலாளர் விசாலாட்சி தலைமையில் இன்று நடைபெற்றது. இதில் கட்சியின் பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

முன்னதாக அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு, போதை பழக்கத்தால் கொலை, கொள்ளை அதிகரித்துள்ளது. அப்படி இருந்தும் தி.மு.க. பாராளுமன்ற தேர்தலில் 39 தொகுதியில் வெற்றி பெற்றது உறுதிக்கொண்டுள்ளது. இந்தியா கூட்டணியில் இருந்த சில கட்சிகள் பிளவுபட்டுள்ளது. த.வெ.க. வரவு என எல்லாவற்றையும் ஆலோசித்து தி.மு.க.வை வீழ்த்த நினைக்கும் கட்சிகள் இதனை கண்காணிக்காவிடில் தி.மு.க.வை வீழ்த்த முடியாது.

த.வெ.க. தலைமையில் பெரும் கூட்டணி அமைந்தால் இந்தியா கூட்டணியை 3-வது இடத்திற்கு தள்ள வாய்ப்பு உள்ளது. தி.மு.க., ஆட்சியில் பல துறைகளில் ஊழல் முறைகேடு உள்ளது. எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கொடுத்தார்கள். தமிழக மக்களுக்கு எந்த பயனும் இல்லை.

தி.மு.க.வை வீழ்த்த நினைக்கும் கட்சிகள் தங்களை சுயபரிசோதனை செய்தால் தான் மிருக பலத்துடன் உள்ள தி.மு.க.வை வீழ்த்த முடியும். வெற்று விளம்பர ஆட்சியாக உள்ளது. அதனை எதிர்க்கட்சிகள் சரியான முறையில் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும்.


அ.தி.மு.க.வில் ஒரு சிலரின் சுயநலத்தால் விழுதுகள் போன்ற பலரை நீக்கி விட்டு நாங்கள் துரோகி என்கிறார்கள். 99 சதவீத தொண்டர்கள் மன வருத்தத்திலும் வேதனையிலும் உள்ளனர். சரியான முடிவு எடுக்காவிடில் தேர்தல் பாடம் தரும். செங்கோட்டையன் எங்களோடு நட்பாக உள்ளார். அதற்காக எங்களுடன் தான் பயணிக்க வேண்டும் என்பதில்லை. அவர் விருப்பம் போல் த.வெ.க.வில் இணைந்துள்ளார்.


நான் எதார்த்தத்தை நாட்டு நடப்பு பற்றி பொறாமை இல்லாமல் சொல்கிறேன். த.வெ.க. வளர்ந்து வரும் கட்சியாக தெரிகிறது. விஜயகாந்த் வருகை போல விஜய் வருகை ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். அவர் பல மக்கள், பெண்கள் ஆதரவை பெற்றவர். முதலில் எங்கள் கட்சியை பலப்படுத்தி வருகிறோம். தவிர்க்க முடியாத சக்தியாக வளர்ந்து வருகிறோம். விஜய் தலைமையில் நல்ல கூட்டணி அமைந்தால் ஆளும் தி.மு.க.விற்கு போட்டியாக அமையும்.

3-வது முறையாக மோடி ஆட்சிக்கு வந்தால் தான் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும் என்பதால் தான் அவர்கள் கூட்டணிக்கு சென்றோம். தொண்டர்களின் முடிவால் தற்போது கூட்டணியில் இருந்து வெளியேறி உள்ளோம். பா.ஜ.க. எங்களிடம் நட்போடு பேசினாலே மிரட்டுவது போல பரப்பி வருகின்றனர். அ.ம.மு.க. எந்த கூட்டணியில் இருந்தாலும் திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதியில் முன்னாள் மேயர் விசாலாட்சி போட்டியிடுவார்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருக்கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு தெப்பல் உற்சவம்






**திருவண்ணாமலை, டிச.09:**

திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் திருக்கார்த்திகை தீபத் திருவிழா முன்னிட்டு அய்யங்குளத்தில் தெப்பல் உற்சவ அலங்காரத்தில் சுப்பிரமணியர் வண்ணமலர் மாலைகளால், தங்க ஆபரணங்களுடன் அலங்கரிக்கப்பட்டு, தோரணங்களுடன் அய்யங்குளத்தில் தெப்பல் உற்சவம் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் தெப்பல் திருவிழாவில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# போதை பொருள் வழக்கில் தயாரிப்பாளர் கைது: சிக்கும் சினிமா துணை நடிகைகள்



**சென்னை, டிச.09:**

போதைப்பொருள் விற்பனை சப்ளையில் ஈடுபட்டதாக திரைப்பட இணை தயாரிப்பாளர் சர்புதீன், முகப்பேரைச் சேர்ந்த சீனிவாசன், வளசரவாக்கத்தைச் சேர்ந்த சரத் ஆகியோரை திருமங்கலம் போலீசார் கடந்த 20-ந்தேதி கைது செய்தனர்.

சர்புதீனின் காரில் இருந்து 27.91 லட்சம் ரூபாயும், சீனிவாசன் வீட்டில் 10 கிராம் ஓ.ஜி. கஞ்சாவும் பறிமுதல் செய்யப்பட்டது.

இதையடுத்து திருமங்கலம் போலீசார் 3 பேரையும் சிறையில் அடைத்தனர். இந்த நிலையில் சர்புதீன், தொழில்அதிபர் சரத் ஆகியோரை திருமங்கலம் போலீசார் காவலில் எடுத்து விசாரணை நடத்தினர்.

சர்புதீன் நடிகர் சிம்புவிற்கு மேலாளராக பணியாற்றி உள்ளார். பல நடிகர்கள், நடிகைகளுடன் பழக்கமுடையர். இதனால் அதில் யாருக்கெல்லாம் போதைப்பொருள் சப்ளை செய்துள்ளார்? என்பது தொடர்பாக போலீசார் அவரிடம் தீவிர விசாரணை நடத்தினர். மேலும் எந்தெந்த சினிமா விருந்துகளில் போதைப்பொருள் பயன்படுத்தப்பட்டது? அதில் கலந்து கொண்ட திரை உலகினர் யார் யார் என்பது தொடர்பாகவும் சர்புதீனிடம் விசாரணை நடத்தி பட்டியலை தயாரித்தனர்.

இந்த நிலையில் சர்புதீன் கொடுத்த தகவலின் பேரில் திரைப்பட தயாரிப்பாளர் தினேஷ் ராஜ் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதை தொடர்ந்து துணை நடிகைகள் பலரும் இந்த வழக்கில் சிக்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. யார் யாரெல்லாம் போதை பொருள் பயன்படுத்தினர் என்ற கோணத்தில் விசாரணை நடந்து வருகிறது.

மேலும் பிரபல நடிகைகளுக்கும் இதில் தொடர்பு உள்ளதா? என்றும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# தமிழகத்தில் தொழில் முதலீட்டாளர்கள் வராததற்கு தி.மு.க அரசின் ஊழல் தான் காரணம் - அன்புமணி,




**தருமபுரி, டிச.09:**
தருமபுரியில் பா.ம.க. மூத்த நிர்வாகி இல்ல திருமணத்திற்கு பா.ம.க. தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் கலந்து கொண்டு திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார்.

தொடர்ந்து அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் பேசியதாவது:-

தருமபுரி மாவட்டத்தில் உள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு வருவது போல் இல்லை. தி.மு.க. ஒரு துரும்பை கூட செய்யவில்லை. சிப்காட் தொழிற்சாலை மட்டும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் தொழிற்சாலைகள் வரவில்லை.

தருமபுரி மாவட்டத்தை தி.மு.க. புறக்கணித்துள்ளது. அதற்கு வருகிற தேர்தலில் மக்கள் பதிலடி கொடுப்பார்கள். வருகிற டிசம்பர் 17-ம் தேதி எனது தலைமையில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மிகப்பெரிய போராட்டம் நடத்தப்படும்.

அதற்கு தி.மு.க.வை தவிர, அனைத்து கட்சிகள், இயக்கங்கள், அமைப்புகளுக்கு அழைப்பு விடுத்துள்ளோம். பீகாரில் நிதிஷ் குமார் வெற்றி பெற்றதற்கு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தியே காரணம். தமிழ்நாட்டில் சமூக நீதியை மு.க.ஸ்டாலின் குழித் தோண்டி புதைந்துள்ளார்.

கர்நாடகாவில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி, ஒப்பந்தத்தில் பட்டியல் சமூகத்தினருக்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதுதான் சமூக நீதி.

தமிழ்நாட்டில் நகராட்சி துறையில் ரூ.888 கோடி ஊழல் நடந்துள்ளதாக குற்றப்பத்திரிகையை, காவல் துறைக்கு கொடுத்துள்ளனர்.

அண்ணா பல்கலைக் கழகத்தில் பொறியாளர் பணிக்கு ரூ.25 லட்சம் வரை ஹவாலா பணம் வந்ததாக 232 பக்கம் அறிக்கை கொடுத்தும் இந்த அரசு விசாரணை நடத்தவில்லை. ஆனால் இந்த செய்தி வெளியானதற்கு விசாரணை நடத்துகிறார்கள். மணல் கொள்ளை நடந்துள்ளது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு என்ன நடக்கிறது என்று தெரியவில்லை.

கூட்டணி குறித்து மிக விரைவில் அறிவிக்கப்படும். எங்கள் கூட்டணி மிகப் பெரிய வெற்றி பெறும்.

தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு 505 வாக்குறுதிகளை கொடுத்தார்கள். இப்போது 13 சதவீத வாக்குறுதிகள் தான் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு மக்கள் பதிலடி கொடுப்பார்கள்.

தொழிலாளர்கள் முதலீடு முழுமையாக வந்ததாக முதலமைச்சரும், அமைச்சரும் பொய்யாக கூறுகிறார்கள். 9 விழுக்காடு தான் முதலீடு வந்துள்ளது. 80 முதலீடு வந்ததாக சொன்னவர்கள். தற்போது 23 சதவீதம் வந்துள்ளது என சொல்கிறார்கள். தமிழ்நாட்டிற்கு வராமல், ஆந்திரா, தெலுங்கானாவுக்கு, தொழில் நிறுவனங்கள் செல்கிறது. இதற்கு தி.மு.க.வின், கலெக்சன், கமிசன் கராப்சன் அதிகம் என்பதால், இங்கு வருவதில்லை.

இவ்வாறு அவர் பேசினார்.

# இறந்ததாகக் கூறி வாக்காளர் பெயர் பட்டியலில் இருந்து நீக்கம்

## மாவட்ட ஆட்சியருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட நாதக வேட்பாளர்கள்!




**சிவகங்கை,டிச.09:**
சிவகங்கை சட்டமன்றத் தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள இந்துஜா மற்றும் அவரது கணவர் ரமேஷ் ஆகியோரின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதாக, இருவரும் மாவட்ட ஆட்சியர் பொற்கொடியிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டது பரபரப்பை ஏற்படுத்தியது.

உயிருடன் இருக்கையில் இறந்தவர்கள் எனக் குறிப்பிட்டு தங்கள் பெயர் நீக்கப்பட்டதாக இந்துஜா, மாவட்ட ஆட்சியர் பொற்கொடியிடம் முறையிட்டார். அதற்கு பதிலளித்த அவர், "ஏதேனும் தவறுகள் இருந்தால் அதைச் சரி செய்வதற்காகத்தான் இந்த பட்டியலை உங்களுக்கு கொடுத்திருக்கிறோம். தவறு நடந்தால் ஊழியர்கள் மீதுத் துறைரீதியான நடவடிக்கை எடுக்கவும், பணியிடை நீக்கம் செய்யவும் உத்தரவிட்டுள்ளேன்," என்று விளக்கம் அளித்தார். இருப்பினும் இந்துஜா, அவரது கணவர் ஆட்சியரிடம் வாக்குவாதத்தை தொடர்ந்ததால், மாவட்ட ஆட்சியர் அங்கிருந்து புறப்பட்டு சென்றார்.

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் (SIR) கடந்த மாதம் 4ஆம் தேதி தொடங்கியது. தமிழ்நாட்டில் உள்ளிட்ட 9 மாநிலங்களிலும் புதுச்சேரி உள்ளிட்ட 3 யூனியன் பிரதேசங்களிலும் இந்த எஸ்.ஐ.ஆர். பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டில் இதற்கு முன்பாக, 2002-2005 காலகட்டத்தில் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

# 12-ம் தேதிக்குள் திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்றப்பட வேண்டும்

## எச்.ராஜா





**கோபி, டிச.09:**
ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் இன்று பாரதிய ஜனதா கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் எச்.ராஜா திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். பின்னர் எச்.ராஜா நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் கார்த்திகை தீபம் ஏற்ற முடியும் என மதுரை உயர்நீதிமன்றம் கூறியிருந்தது. நீதிபதி சாமிநாதன் நேரடியாக சென்று பார்வையிட்டு வந்துள்ளார். இந்த அரசு இந்து விரோத அரசாக செயல்பட்டு வருகிறது.

முருகனுக்கு சொந்தமான இடத்தில் தீபத்தை ஏற்றுவதை எப்படி தடுக்க முடியும். கடந்த சில தினங்களுக்கு முன்பு சிவகங்கையில் இருந்து மதுரை நோக்கி நான் வந்து கொண்டிருந்தேன். அப்போது டி.எஸ்.பி செல்வராஜ் என்பவர் வாகன விதிமுறைகளை மீறி செயல்பட்டதாக கூறி என் மீது வழக்கு பதிவு செய்துள்ளார். இந்துக்களை என்ன வேண்டுமானாலும் செய்யலாமா?

வரும் சட்டமன்றத் தேர்தலில் முக்கிய சாராம்சமாக திருப்பரங்குன்றம் தீபம் பிரச்சினை தான் இருக்கும். இதன் மூலம் தி.மு.க அரசை தூக்கி அடிப்போம். தமிழகத்தில் தி.மு.க அரசை துடைத்தெறிய வேண்டும்.


வரும் 12-ம் தேதிக்குள் திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்றப்பட வேண்டும்.

அ.தி.மு.க-பா.ஜ.க கூட்டணிக்கு எடப்பாடி பழனிசாமி தலைவராக உள்ளார். தமிழகத்தில் நிச்சயம் மாற்றம் நிகழும். கடந்த 55 மாதத்தில் தமிழகத்தில் மட்டும் 6,700 கொலைகள் நடந்துள்ளது. வன்கொடுமைகளும் அதிகமாக நடந்து வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# செந்தில் பாலாஜிக்கு கூடுதல் ஜாமின் தளர்வுகள்





## உச்ச நீதிமன்றம் உத்தரவு

அரசு வேலை வாங்கி தர பணம் பெற்றதாக எழுந்த குற்றச்சாட்டில் செந்தில் பாலாஜிக்கு நீதிமன்றம் ஜாமின் தளர்வுகளை வழங்கியுள்ளது.

தேவைப்பட்டால் மட்டும் செந்தில் பாலாஜியை விசாரணைக்காக நேரில் அழைக்கலாம் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ED விசாரணைக்காக அழைக்கும்பேது அதிலிருந்து விலக்கு தேவை என்றால் செந்தில் பாலாஜி சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தை அனுகலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்க செந்தில்பாலாஜி தரப்புக்கு அறிவுறுத்தல் வழங்க வேண்டும் என ED சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

செந்தில் பாலாஜி வழக்கிற்கு இடைஞ்சலாக இருக்கிறார் என்றால் நீங்கள் நீதிமன்றத்தை நாடலாம் எனவும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

# திருவேடகம் சோனை சாமி, அங்காள பரமேஸ்வரி கோவில் கும்பாபிஷேகம்



மதுரை, டிச.9: மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே திருவேடகம் கிராமத்தில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற சோனை சாமி, அங்காள பரமேஸ்வரி கோவில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. திருவேடகம் கணேச குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் சனிக்கிழமை காலை மங்கல இசை, விநாயகர் பூஜையுடன் முதலாம் கால யாக பூஜையை தொடங்கினர்.

ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் கால யாக பூஜை மற்றும் மூன்றாம் கால யாக பூஜை நடைபெற்றது. அதிகாலை விக்னேஸ்வர பூஜையுடன் நான்காம் கால யாகசாலை பூஜை தொடங்கி பூர்ணாஹூதியுடன் நிறைவுற்றது. இதைத்தொடர்ந்து கடம் புறப்பாடாகி திருக்கோவிலை சுற்றி வலம் வந்து கும்பத்தின் மீது புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. தொடர்ந்து பரிவார தெய்வங்களுக்கு புனித நீரால் அபிஷேகம் செய்யப்பட்டது. கும்பாபிஷேக நிகழ்வின்போது வானத்தில் கருடன் வட்டமிட்டது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பால், தயிர், வெண்ணெய், மஞ்சள் பொடி, மா பொடி, திரவிய பொடி, சந்தனம், பன்னீர் உள்ளிட்ட பல்வேறு திரவியங்களால் சுவாமிக்கு அபிஷேகம் செய்யப்பட்டது.

தொடர்ந்து தீபாராதனை காட்டப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. அன்னதானமும் நடைபெற்றது. விழாவில் திருவேடகம், சோழவந்தான், குருவித்துறை, மன்னாடிமங்கலம் ,மேலக்கால், தேனூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.




# தவெக சின்னம்...எனக்கு தெரியும்: செங்கோட்டையன்



கோபி செட்டி பாளையம், டிச.9: தவெகெ தலைமை நிர்வாக குழு ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் பேசியதாவது

நாமக்கல் மாவட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பேசும் போது, பெரிய கட்சி நம்மிடத்தில் வந்துவிட்டது.. அங்கே கொடி அசைத்து கொண்டிருக்கிறார்கள்.. பிள்ளையார் சுழி போட்டாச்சு என்றார்.. ஆனால் இப்போது பிள்ளையார் சுழி போடவில்லை.. வேறு சுழி போடப்பட்டிருக்கிறது. எல்லோரின் முதுகிலும் ஏறி சவாரி செய்யலாம் என்று சிலர் கனவு கண்டார்கள். ஆனால் மக்களின் சக்தி விஜய்யை தமிழ்நாட்டின் முதலமைச்சராக அமர வைப்பார்கள். மக்கள் சக்திக்கு யாராலும் தடை போட முடியாது. இந்த கிராமத்தில் கூடிய கூட்டம் போல், விஜய்க்கு ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டம் கூடுகிறது. ஒவ்வொரு குழந்தையும் பெற்றோரை விஜய்க்கு வாக்கு போட சொல்கிறார்கள். ஆண்ட கட்சிகளே தான் ஆள வேண்டுமா? மற்றவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கக் கூடாதா?

ஏன் விஜய் ஆட்சிக்கு வரக் கூடாது? நல்லாட்சியை கொடுக்கக் கூடிய புதிய முகத்தை மக்கள் தேடிக் கொண்டே இருந்தார்கள்.. அந்த முகம் கிடைத்துவிட்டது.. என்னை யாராலும் சாய்த்துவிட முடியாது.. சாய்க்க நினைப்பவர்கள் சாய்ந்து போவார்கள்.. நான் என்று ஒருவன் நினைத்தால், ஆண்டவன் தான் என்று காட்டிவிடுவான்.. மிக விரைவிலேயே தவெகவுக்கு சின்னம் கிடைக்கப் போகிறது. அது எனக்கு நன்றாக தெரியும்.. ஆனால் வெளியில் சொல்லக் கூடாது.. அந்த சின்னத்தை பார்த்த பிறகு தான் நாடே வியப்படைய போகிறது.. அஞ்சப் போகிறது.. ஏனென்றால் இந்த சின்னத்தை வெல்வதற்கு இனி தமிழ்நாட்டில் எந்த இயக்கத்தாலும் முடியாது" என்று கூறினார்.

# தர்மபுரியில் காவலரின் கையை கடித்த தவெக தொண்டர் கைது



தர்மபுரி, டிச.9: தர்மபுரி மாவட்டம் பாலக்கோட்டில் கடந்த வாரம் மனமகிழ் மன்றம் என்ற பெயரில் தனியார் மதுபான பார் திறக்கப்பட்டது. இதற்கு அந்த பகுதி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த நிலையில் பாலக்கோட்டில் தனியார் மதுபான பார் திறக்கப்பட்டதை கண்டித்தும், அந்த பாரை உடனடியாக மூட வலியுறுத்தியும் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அப்போது போலீசாருக்கும், தவெக வினருக்கும் வாக்கு வாதம் முற்றி தள்ளுமுள்ளானது. இதில் முற்றுகையிட வந்தவர்களை தடுக்க முயன்ற மகேந்திரமங்கலம் போலீஸ் ஏட்டு அருள் என்பவரது கையை தவெக தொண்டர் கடித்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதில் காவலருக்கு அதிர்ஷ்டவசமாக காயம் ஏற்படவில்லை.

இதனிடையே போராட்டத்தின்போது போலீஸ் ஏட்டுவின் கையை தவெக தொண்டர் கடித்த வீடியோ காட்சி சமூக வலைதளங்களில் வைரலானது. இந்த நிலையில் போராட்டத்தின் போது காவலரின் கையைக் கடித்த தவெக தொண்டர் ஜெமினி என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் காவலர்களுடன் தள்ளுமுள்ளுவில் ஈடுபட்ட விவகாரத்தில் தவெகவினர் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# பள்ளிக்கு புறப்பட்ட மாணவி மயங்கி விழுந்து உயிரிழப்பு - அதிர்ச்சி சம்பவம்

தென்காசி, டிச.9: பள்ளிக்கு புறப்பட்ட மாணவி மயங்கி விழுந்து உயிரிழப்பு - அதிர்ச்சி சம்பவம். இதுபற்றி தகவல் அறிந்ததும் கடலூர் திருப்பாதிரிப்புலியூர் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

தொடர்ந்து இறந்த தேவிகாவின் உடலை போலீசார் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுபற்றி ஞானசேகரன் கடலூர் திருப்பாதிரிப்புலியூர் போலீசில் புகார் செய்தார்.

அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ராமநாதபுரத்தில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற யானை தந்தங்கள் பறிமுதல்

ராமநாதபுரம், டிச.9: ராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து கடல் வழியாக இலங்கைக்கு யானை தந்தங்கள் கடத்தப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் தீவிர தேடுதல் வேட்டை நடத்திய கீழக்கரை மரைன் போலீசார் , இலங்கைக்கு கடத்த முயன்ற 4 கிலோ யானை தந்தங்களை இன்று பறிமுதல் செய்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட யானை தந்தங்களின் மதிப்பு ரூ. 1 ஆகும். இந்த யானை தந்தங்கள் கடத்தல் சம்பவம் தொடர்பாக 3 பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.

# ஓப்பன் யோகாசன போட்டி



2025 கல்வி ஆண்டுக்கான கலைக் கோவில் யோகாலயம் நடத்தும் 16ம் ஆணடு தமிழ்நாடு ஓப்பன் யோகாசன போட்டி மாநில அளவில் நடத்தப்பட்டது.
அதில் நமது திருச்சி எக்விடாஸ் பள்ளி மாணவர்கள் 16 பேர் கலந்து கொண்டு முதல், இரண்டாம், மற்றும் மூன்றாம் இடத்தை பெற்றதற்காக இவர்களை பாராட்டி முதல்வர் அங்கயல் கன்னி மற்றும் துணை முதல்வர் புகழ் மேரி லாரன்ஸ் மற்றும் தாளாளர் ரங்கநாதன் அவர்கள் யோகா ஆசிரியர் மற்றும் பள்ளி நிர்வாகத்திற்கும் தனது பாராட்டுகளை தெரிவித்துள்ளார்

# "நூல் வெளியீட்டு விழா"



கவிஞர் மார்ஷல் முருகன் எழுதிய பேன(ந)ர பேசுகிறது புத்தகத்தை வெளியிட்ட அவருக்கு ராகவி சினி ஆர்ட்ஸ் சார்பிலும், நீலாவதி டிரஸ்ட் சார்பிலும் திரைப்பட இயக்குனரும், நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினரும், சமூக சேவகருமான சேவா ரத்னா டாக்டர் ஜெ.விக்டர், மதுரை உலா நற்பணி மன்றம் மற்றும் சமூக சேவகருமான ஒளிப்பதிவாளர் கார்த்திக், நடிகர் அப்பா பாலாஜி, பார்வர்ட் பிளாக் தலைவர் பி.என்.அம்மாசி, டான்ஸ் மாஸ்டர் கண்ணன், ஓவிய ஆசிரியை நாகஜோதி, விசாலாட்சி மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்துக்கள் கூறினார்கள். அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

# பெரும்பூண்டி கங்காதேவி கங்கைகொண்ட ஈஸ்வர ஆலயத்தில் முற்றோதல்



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் பெரும்பூண்டி அருள்மிகு கங்காதேவி சமேத கங்கைகொண்ட ஈஸ்வர ஆலய இரண்டாம் ஆண்டு சிவபுரத்து சிவனடியார்கள் கூட்டம் ரமேஷ் தலைமையில் ஊராட்சித் மன்றத்தலைவர் சுமதி சம்பத் உதவியுடன் நாள் முழுவதும் ஆலயத்தில் முற்றோதல் நிகழ்ச்சி நடைபெற்றது
அதனைத்தொடர்ந்து வருகைதந்த அனைவருக்கும் அறுசுவை அன்னதானம் வழங்கினர்.

# திருக்கார்த்திகை தீபத் திருவிழா நிறைவு



திருவண்ணாமலை டிசம்பர்-8 அருள்மிகு அண்ணாமலையார் தீபத் திருவிழா இனிதே முடிவடைந்தையொட்டி சண்டிகேஸ்வரர் ரிஷப வாகனத்தில் மாடவீதி உலா நடைபெற்றது. இலட்ச க்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம்




# ராமநாதபுரத்தில் தமுமுக ஆர்பாட்டம்





பனைக்குளம் நவ 7: ராமநாதபுரம் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் மற்றும் மனித நேய மக்கள் கட்சி சார்பில் பாபர் மசூதி இடிப்பு 33 வது ஆண்டு தினத்தை முன்னிட்டு கறுப்பு துண்டு அணிந்து போராட்டம் புதிய பஸ் நிலையம் அருகில் தமுமுக மாநில துணைச் செயலாளர் சலீமுல்லாகான் தலைமையில் நடைபெற்றது.

இதில் மணபாறை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் சமது சிறப்புரை ஆற்றினார்.

மேலும் திமுக சார்பில் ரவிசந்திர ராமவன்னி மற்றும் தமுமுக மாநில செயலளார் தொண்டி சாதிக்பாட்சா கண்டன உரை நிகழ்த்தினார் மற்றும் கிழக்கு மாவட்ட செயலாளர் பட்டாணி மீரான் மற்றும் சேக் அப்துல்லா வாவா ராவுத்தர் பீரிமியர் இபுறாகீம் மற்றும் பல நிர்வாகிகள் கண்டன உரை நிகழ்த்தினார்கள் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகளும் கண்டன உரை நிகழ்த்தினார்.

# கேட்டாயா?



செல்போனின் டிஸ்ப்ளே பளிச்சிட்டது. நண்பன் தினேஷ் தான். பெயரைப் பார்த்ததுமே உற்சாகமானான் யுவன் .

தினேஷிடம் ஒரு வாரம் முன்புதான் யுவன் சொல்லி வைத்திருந்தான். இப்போது நாங்கள் இருக்கும் வீட்டின் வாடகை அதிகமாக இருக்கிறது என்றும் குறைந்த வாடகையில் உங்கள் ஏரியாவில் ஏதாவது வீடு கிடைக்குமா என்றும் பார்த்து சொல்லும்படி கூறி இருந்தான்.

செல்போனை எடுத்து "ஹலோ தினேஷ். சொல்லுடா " என்றான் யுவன் . "வீட்டுக்கு சொல்லி வச்சிருந்த இல்லே.. எங்க வீட்டுக்கு பக்கத்துலயே ஒரு வீடு காலி ஆகுது. எங்க ஹவுஸ் ஓனரோடது தான். பேசி முடிச்சிடலாமா? " என்று கேட்டான் தினேஷ்.

"தாராளமா. ஆமா வாடகை குறைவாகத்தானே இருக்கும் ?"

"நீ இப்போ கொடுக்கறதை விட ஒரு 2000 ரூபாய் குறைவா தான் இருக்கும் "என்றான் தினேஷ்.

"வண்டி பார்க் பண்ண எல்லாம் இடம் எப்படி ?"என்று யுவன் கேட்க "தேவையான இடம் இருக்கு." என்றான் தினேஷ்.

"பக்கத்திலேயே கடைங்க எல்லாம் இருக்கா இல்லே தூரமா போகணுமா?"

"சும்மா கொஞ்ச தூரத்துலயே ரெண்டு டிபார்ட்மெண்ட் ஸ்டோர்கள் இருக்கு" என்றான் தினேஷ்.

"அப்புறம் தண்ணி பிரச்சனை எல்லாம் "

"தண்ணி சும்மா தேன் மாதிரி இனிப்பா இருக்கும்." என்ற தினேஷிடம்" சரி ஓனர் வந்ததும் பேசி முடிச்சிடு" என்றான் யுவன்.

புது வீட்டுக்கு மனைவியுடன் குடி வந்து ஒரு வாரம் ஆயிற்று .காலை ஆறு மணிக்கு நியூஸ் பேப்பர் எடுக்க வெளியில் வந்த யுவன் அதிர்ந்து போனான். நேற்று இரவு நிறுத்தியிருந்த அவனுடைய பைக் காணாமல் போயிருந்தது. பதற்றத்துடன் தினேஷைத் தேடிச் சென்ற யுவன் நடந்த விஷயத்தை கூறினான்.

"ஏண்டா யுவன் இந்த ஏரியாவில் தான் திருட்டு பயம் அதிகமா இருக்கே. கொஞ்சம் உஷாரா இருக்கக் கூடாதா?"என்று தினேஷ் கேட்க "என்னது திருட்டு பயமா ? இதை ஏண்டா நீ அன்னைக்கே சொல்லல? "என்று கத்தினான் யுவன்.

"நீ அதைப் பத்தி கேட்கவே இல்லையே "என்றான் தினேஷ் அமைதியாக .

மு.மதிவாணன்
குபேந்திரன் நகர்
அரூர் 63690

**சசிகலா விஸ்வநாதன்**



# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*“தரகரே… நீங்க ஒரு பெரிய விஷயத்தை மறைச்சிட்டீங்க.”*

*“என்ன சொல்றீங்க?”*

*“பெண் அஞ்சடி உயரம்னு சொன்ன நீங்க, மூணு அடி அகலம் இருப்பாள்னு சொல்லவே இல்லையே…”*




# செவ்வாழை பழத்தின் நன்மைகள்

வாழைகளில் செவ்வாழை மிகவும் அற்புதமான பல மருத்துவக் குணங்கள் கொண்ட பழம். செவ்வாழைப்பழம் ஒன்று சாப்பிட்டால் போதும், வயிறு நிறைந்த உணர்வு நமக்கு ஏற்படும்.

வைரஸ் கிருமிகளால் நம் உடல் பாதிப்பு அடையாமல் இருக்கத் தினந்தோறும் காலையில் ஒரு செவ்வாழைப் பழத்தைச் சாப்பிட்டு வந்தாலே போதும்.


கண் பார்வை மங்குதல், கண் சம்பந்தப்பட்ட வியாதிகள் ஆகியவைகளுக்கு செவ்வாழைப்பழம் ஒரு வரப்பிரசாதமாகும்.



செவ்வாழைப் பழத்தைச் சாப்பிட்ட பின்பு, ஒரு தேக்கரண்டி தேனை அருந்த வேண்டும். பல் தொடர் புள்ள பல்வேறு பிரச்னைகள் அனைத்தையும் செவ்வாழைப் பழம் தீர்த்து வைக்கும். பல் வலி பஞ்சாய் பறந்து போகும்.

செவ்வாழை சக்தி நிறைந்த பரிபூரண உணவு ஆகும். இப்பழத்தில் உள்ள மக்னீசியம் மாரடைப்பு வராமல் தடுக்கும் சக்தி உடையதாகக் கருதப்படுகிறது.

வைட்டமின் A, B1, B2, புரதம், நார்ச்சத்து, பாஸ்பரஸ், தையமின், மக்னீசியம், ரிபோபிளேவின், நியாசின் என்று எல்லாச் சத்துக்களும் உள்ளன.




# தினம் ஒரு சமையல்

## ரவை அடை

தேவையான பொருட்கள்:


| | |
|---|---|
| ரவா | - 3 கப் |
| கடலை மாவு | - 1 & 1/4 கப் |
| வெங்காயம் | - 6 (பெரிய வெங்காயம்) |
| சிவப்பு மிளகாய் | - 9 |
| மஞ்சள் தூள் | - 1/4 தேக்கரண்டி |
| சோம்பு (சோம்பு) | - 2 தேக்கரண்டி |
| கறிவேப்பிலை | - சில |
| கொத்தமல்லி இலைகள் | - தேவையானவை |
| புதினா இலைகள் | - 10 |
| சுவைக்க உப்பு | |
| எண்ணெய் | |



செய்முறை:

* ரவாவை 3 முதல் 4 கப் தண்ணீரில் ஒரு மணி நேரம் ஊற வைக்கவும்.
* பின்வரும் விஷயங்களை நறுக்கி ஒதுக்கி வைக்கவும் - வெங்காயம், கொத்தமல்லி, புதினா மற்றும் கறிவேப்பிலை.
* சிவப்பு மிளகாய் மற்றும் சோம்பு மிக்ஸியில் அரைத்து (சிறிது தண்ணீரைப் பயன்படுத்துங்கள்) அதை ஒதுக்கி வைக்கவும்.
* கடலை மாவு ஊறவைத்த ராவாவில் கலந்து நன்கு கலக்கவும்.
* பின்னர் கிரைண்ட் பேஸ்ட் (சிவப்பு மிளகாய் மற்றும் சோம்பு) கலக்கவும்.
* இப்போது நறுக்கிய வெங்காயம், கொத்தமல்லி, புதினா மற்றும் கறிவேப்பிலை சேர்க்கவும். பின்னர் உங்கள் சுவைக்கு ஏற்ப உப்பு சேர்க்கவும்.
* தோசை கடாயை சூடாக்கி, மூடியுடன் நடுத்தர தீயில் தோசை செய்யுங்கள். (இது நேரம் எடுக்கும், அரிசி மாவு தோசை விட சற்று அதிகம்)
* தேங்காய் சட்னியுடன் சூடாக பரிமாறவும்.

# கவிதை அரங்கம்!



எடுத்து வைப்பது
சிறிய அடியாக
இருந்தாலும்
எட்டுவது சிகரமாக
இருக்க வேண்டும்

எதையும் சாதிக்க
விரும்பும்
மனிதனுக்கு
நிதானம் தான்
அற்புதமான
ஆயுதமே தவிர
கோபம் இல்லை

வெற்றி கவிதைகள்
வெற்றி கவிதை
வரிகள்
ஓடிக்கொண்டே இரு
எல்லைக்கோட்டை
அடையாவிட்டாலும்
உன் கால்கள்
உறுதிப்படும்

## கனவு இல்லம் கனவாகலாம்...



பெற்றோரின் பெறுமதி என்ன தெரியுமா? நீ வாழும் வரை அவர்களுக்கு துன்பம் கொடுக்காது அவர்களது மரியாதையை இழக்க விடாது காப்பது. இல்லையேல் உன் பெறுமதி உன்னை விட்டு சென்று விடும்...

காதலிப்பதால் ஏற்படும் நன்மையை விட அக் குறுகிய காலத்தில் ஏற்றப்படும் தீமை அதிகம்...நான் காதலித்தவனும் அல்ல காதலிப்பவனும் அல்ல..

கனவே உன் கடலில் என்னை முழ்கடித்து விடாதே எனக்கு நீந்த தெரியும். அவ்வாறு நான் நீந்தித் தப்பி விட்டால் நீ தோற்று விடுவாய்.




## சினிமா

## "ரொம்ப வாழ்க்கையில் அடிவாங்கி இருக்கேன்".. திருமணம் குறித்து மனம் திறந்து பேசிய நடிகர் சிம்பு

நடிகர் சிம்பு தமிழ் சினிமாவில் முன்னணி நடிகர்களில் ஒருவர். இவர் நடிப்பில் அடுத்ததாக உருவாகி வரும் திரைப்படம் அரசன். இப்படத்தை இயக்குநர் வெற்றிமாறன் இயக்க அனிருத் இசையமைக்கிறார்.

கடந்த சில வாரங்களுக்கு முன் இப்படத்தின் டைட்டில் அறிவிப்பு வீடியோ வெளிவந்து நல்ல வரவேற்பை பெற்றது. வடசென்னை உலகில் அரசன் படம் உருவாகிறது. இதனால் இப்படத்தின் மீது ரசிகர்கள் அளவுகடந்த எதிர்பார்ப்பை வைத்துள்ளனர். மேலும் எஸ்.டி.ஆர் 49 திரைப்படமும் சிம்பு கைவசம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



இந்த நிலையில், திருமணம் குறித்து நடிகர் சிம்பு வெளிப்படையாக மனம் திறந்து பேசியுள்ளது இணையத்தில் வைரலாகி வருகிறது.

அவர் கூறியதாவது: "திருமணம் நடக்கும்போது நடக்கும். தனியா இருக்கிறதும், யாரோட இருக்கிறதும் மேட்டர் கிடையாது. நீங்க ஒழுங்கா, நிம்மதியா இருக்கீங்களா என்பதுதான் மேட்டர். சந்தோஷமா இருக்கீங்களா? நாலு பேரை நிம்மதியா பார்த்து கொள்கிறீங்களா? அது போதும். நான் இப்போ இப்படி பேச காரணமே ரொம்ப வாழ்க்கையில் அடிவாங்கி இருக்கேன்" என கூறியுள்ளார்.



வேற லெவல் கிளாமரில் நடிகை திவ்ய பாரதி.. ஹாட் ஸ்டில்கள்

## விஜய்யுடன் நடனம் ஆட மறுத்துள்ள பிரபல நடன இயக்குனர், ஆனால்... பிரபலம் தகவல்



தமிழ் சினிமா கொண்டாடும் முன்னணி நடிகர் விஜய், யார் படத்திற்கு வரவேற்பு இருக்கிறதோ இல்லையோ, ஆனால் இவரது படத்திற்கு பெரிய அளவில் வரவேற்பு உள்ளது. மார்க்கெட் குறித்து சொல்லவே வேண்டாம், வியாபாரம், பாக்ஸ் ஆபிஸ் தாறுமாறாக நடக்கும். விஜய் தனது திரைப்பயணத்தில் கடைசியாக நடிக்கும் படம் ஜனநாயகன், படம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் பொங்கல் ஸ்பெஷலாக வெளியாக உள்ளது.

படத்தின் இசை வெளியீட்டு விழா இந்த மாதம் 27ம் தேதி மலேசியாவில் படு பிரம்மாண்டமாக நடக்க உள்ளது.நடிகர் விஜய்யின் போக்கிரி படம் குறித்து நடிகர் வையாபுரி ஒரு விஷயம் பகிர்ந்திருந்தார்.

அந்த பேட்டியில் அவர், போக்கிரி படத்தில் பிரபுதேவாவுடன் எப்படியாவது நடனமாட வேண்டும் என்று விஜய்க்கு ஆசை. நான் மாஸ்டருக்கு நெருக்கம் என்பதால் விஜய் என்னிடம் சொன்னார்.

இந்த விஷயத்தை நானும், ஸ்ரீமனும் பிரபுதேவாவிடம் சொல்ல அதற்கு அவர், முதலில் வேண்டாம், நான் அவருடன் தோன்ற வேண்டாம் என மறுத்தார். பின் நாங்கள் விடாமல் நச்சரித்து அவரை சம்மதிக்க வைத்தோம் என கூறியுள்ளார்.

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, Web: www.paperboy.biz**